பக்கங்கள் 21

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 07 வெள்ளிக்கிழமை 23.08.2024 | அதிர்வு 021

## இந்தியத் தூதுவருடன் தமிழரசுக் கட்சி சந்திப்பு

(விரிவான செய்தி 6ஆம் பக்கத்தில்)





### தேர்தலைப் பிற்போட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறிய ரணில்:

# உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நாங்கள் வரவேற்கின்றோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு





“ரணில் விக்கிரமசிங்க எனும் பதில் ஜனாதிபதி உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போட்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமையையே மீறி இருக்கின்றார். உயர்நீதிமன்றமே இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. இந்தத் தீர்ப்பை நாங்கள் வரவேற்கின்றோம்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 05▶

### பொலிகண்டியில் இருந்து பொத்துவில் வரை

## பரப்புரைப் பயணம் இன்று ஆரம்பம் பொது வேட்பாளர் தரப்பு அறிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனின் “நமக்காக நாம்” தேர்தல் பரப்புரைப் பயணம் இன்று யாழ். வடமராட்சி, சக்கோட்டை கொடிமுனையில் இருந்து ஆரம்பிக்கின்றது. 05▶




2023 இல் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் முடக்கப்பட்டமை தொடர்பாக நேற்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு குறித்து ஒரு குழப்ப நிலை மக்கள் மத்தியில் உள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இயன்ற விரைவில் விரைந்து நடத்துமாறு தேர்தல் ஆணையத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்த உத்தரவுப்படி உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணைக் குழுத் தலைவரும் தெரிவித்துவிட்டார்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட தேர்தலை இப்போது அதே வேட்பு மனுக்களின் அடிப்படையில் நடத்துவது சிக்கலானது என்ற கருத்து உள்ளது. 05▶



# உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்ததில் எந்த வருத்தமும் இல்லை என்கிறார் ரணில்!

## உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அவரது பதில் இது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவது மக்களின் அடிப்படை உரிமை மீறல் என சுட்டிக்காட்டிய போதிலும், மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்காக அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போனதற்கு வருந்தவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வேலைத் திட்டத்தில் ஒவ்வொரு மணித்தியாலமும் பெறுமதி வாய்ந்தது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு அந்த நேரத்தை செலவிட்டிருந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியாது போயிருக்கும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த விடாது தடுத்தமை மூலம் ஜனாதிபதி வாக்காளரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள பின்னணியில் இந்தக் கருத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலடியாகத் தெரிவித்திருக்கின்றார்.

மஹரகம இளைஞர் சேவை மன்றக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற புதிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

உணவு, மருந்து, எரிவாயு, எரிபொருள் இன்றி மக்களின் அன்றாட வாழ்க்கையைத் தொடர முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கடந்த இரண்டு வருடங்களில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கத் தன்னை அர்ப்பணித்துள்ளார் எனவும் கூறினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும், அதற்குத் தேவையான பணம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலையும், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க –

“அரசியல் ரீதியாக நாம் இப்போது புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளோம். அந்த சகாப்தம் எங்கள் அணியால் உருவாக்கப்பட்டது. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது பாரம்பரிய தலைவர்கள் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்வரவில்லை. ஆனால் எமது குழு ஓரணியில் திரண்டு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அப்போது எங்கள் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. ரூபாயின் பெறுமதி சரிந்திருந்தது. ஆனால், பொருளாதாரத்தை மறுசீரமைத்து, ரூபாயைப் பலப்படுத்தி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தியுள்ளோம். கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் வலுவாக உள்ளது. வரும் ஆண்டிலும் அது வலுவாக இருக்கும் என நம்புகிறோம். பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு, நாம் முன்னேற வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறினால் பணம் கிடைக்காது. அந்த நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்வது என்பது தற்போதைய நிலைமைகளை விட்டு விலக நேரிடும். நாங்கள் இன்னும் மென்மையான விதிமுறைகளைக் கேட்டோம், ஆனால் கிடைக்கவில்லை. இந்த சலுகைகள் மூலம் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திறன் நம்மிடம் உள்ளது. ஆனால் இவற்றை மாற்ற முயற்சித்தால் கிடைக்க வேண்டிய பணத்தை இழக்க நேரிடும். பின்னர் நாம் வரிசையில் நிற்கும் யுகத்திற்குச் செல்ல நேரிடும்.

மிகவும் சிரமப்பட்டு நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்துள்ளோம். நான் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 89 பில்லியன் டொலரிலிருந்து 76 பில்லியன் டொலர் வரை குறைந்திருந்தது. இதை மீண்டும் 84 பில்லியன் டொலராகக் கொண்டு வந்துள்ளோம். இரண்டு வருடங்களில் இந்தப் பணியை முடித்தோம். ஏனைய நாடுகளுக்கு இதுபோன்ற நிலையில் இருந்து மீண்டுவர 5 – 10 ஆண்டுகள் ஆனது. நாம் சரியான பொருளாதார வேலைத்திட்டத்தை முன்னெடுத்ததால், இந்த வெற்றியைப் பெற முடிந்தது. இதையெல்லாம் தவிர்த்துவிட்டு உள்ளூராட்சி மன்ற, மாநகர சபைத் தேர்தல்களை நடத்தியிருந்தால் என்ன நடக்கும் என்று கேட்க விரும்புகிறேன். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த குறைந்தது இரண்டரை மாதங்கள் தேவைப்படும். அந்த இரண்டரை மாதங்களை நாம் இழந்திருந்தால், இன்று நமது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 84 பில்லியன் டொலராக உயர்த்தியிருக்க முடியுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடினோம். உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினோம். இந்த நேரத்தை உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பயன்படுத்தியிருந்தால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்டிருக்க முடியுமா என்று கேட்க வேண்டும். ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நாட்டை முன்னேற்றுவதில் முக்கியமானதாக இருந்தது.

இரண்டு வருடங்களில் உலகில் எந்த நாடும் இத்தகைய வெற்றியைப் பெற்றிருக்காது. சர்வதேச சமூகம் எங்களைப் பாராட்டுகிறது. இவ்வாறு பணியாற்றியிருக்காவிட்டால் இந்த நாடு அழிந்திருக்கும்.

ஆனால் எதிர்கட்சிகள் வழக்கு தொடர்ந்தன. 2022இல் பொருளாதாரத்தை இயல்பு நிலைக்குக் கொண்டுவர ஏன் அவர்களுக்கு உயர் நீதிமன்றத்திற்கு சென்று வழக்குத் தொடர முடியவில்லை? அதனால் இந்தத் தேர்தலை ஒத்திவைத்ததில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. ஆனால் நாட்டில் ஜனாதிபதி தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைக்க முடியாது. அது மக்களின் உரிமை. அந்த வாக்களிக்கும் உரிமையை நான் மதிக்கிறேன். அதே போல், மக்களின் வாழ்வுரிமையையும் நான் மிகவும் மதிக்கிறேன். எரிவாயு, மருந்து, எரிபொருள் இல்லாமல் மக்கள் வாழ முடியாது. அந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தேன். தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் இன்று தெரிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைவரும் தீர்மானித்துள்ளோம். அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாகாண சபை தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் அவசியம் என்று பலர் கூறுகின்றனர். இதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்குத் தேவையான பணத்தையும் ஒதுக்க வேண்டும். இதுகுறித்த புதிய சட்டங்களை கொண்டு வர வேண்டும். இளைஞர் பிரதிநிதித்துவம் கொண்டு வரப்பட வேண்டும். இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்தில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த முடிந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். எனவே, நாம் எடுக்கும் முடிவு சரியா தவறா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” என்று தெரிவித்தார்.



# ஜனாதிபதி வேட்பாளர் ஐதுறுஸ் மொஹமட் இல்யாஸ் நேற்று வியாழன் மறைவு



(எம்.எச்.எம். சியாஜ்)

புத்தளத்தின் மூத்த அரசியல்வாதியும் 2024 ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஐதுறுஸ் மொஹமட் இல்யாஸ் நேற்று வியாழக் கிழமை புத்தளம் வைத்தியசாலையில் காலமானார்

புத்தளத்தில் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் மூத்த அரசியல்வாதியான இவர் கடந்த மூன்று தினங்களாக புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.


# நினைவகலா நினைவுகள்

பிறப்பு 21 * 10 * 1937



இறப்பு 23 * 08 * 2012

இந்திரராசா செங்காரபிள்ளை (சங்கர்)

பிறப்பு 11 * 02 * 1936



இறப்பு 29 * 08 * 2009


செங்காரபிள்ளை பூரணபாக்கியம்

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


Vijaya Jewellery's
Tamil Fest
தமிழர் தெரு விழா
SINCE 2015 முதல்
AUGUST
SAT 24 12PM - 11PM
SUN 25 11AM - 9PM
MARKHAM ROAD
BETWEEN MCNICOLL & PASSMORE
FREE ADMISSION
POWERED BY
YORK U
Markham Campus
உலகிலேயே அதிக மக்கள் பங்கேற்கும்
மிகப்பெரும் தமிழர் தெருவிழா
Largest Tamil Street Festival in the World
EXPECTED ATTENDEES
300,000 +
Riddim of Remix
Super Sons
TITLE SPONSOR
Vijaya Jewellery
POWERED BY SPONSOR
YORK U
Markham Campus
SILVER SPONSORS
LISA
PRADON
Realty Team
WOW! WING
MARKETING PARTNER
PRINT FAST
PROUDLY PRESENTED BY
CTC
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
SUPPORTED BY
Canada
MEDIA SPONSORS
ATN
east FM 102.7 தமிழ்
info@canadiantamilcongress.ca 416.240.0078 tamilfest.ca @TamilFest


Build Your Dream Home with us....
NORTH WALL
ENGINEERING
"Experience a professional service like no other"
Our Services:
Architectural Designing
Structural Planning
2D & 3D Drawing
BOQ Assessment
Interior Designing
Landscaping
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766
Nelliyady, Jaffna.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனால் தேர்தல் ஆணையம் புதிதாக வேட்பு மனுக்களைக் கோரிப்பெற்று அதன் பின்னர் தேர்தலை நடத்துமா அல்லது கடந்த வருடம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களின் அடிப்படையில் தேர்தலை நடத்துமா என்று சந்தேகமே மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

'உள்ளூராட்சி தேர்தல் - 2023'ஐ இனியும் காலம் தாழ்த்தாது நடத்துமாறு உயர் நீதிமன்றம் வழிப்படுத்தி உள்ளது.

அப்படிப் பார்த்தால் 2023 இல் வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தலை தொடர்ந்து முன்னெடுத்து நடத்த வேண்டும்.

அண்மையில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் அணி மாறல்களால் தெற்கு அரசியலில் பெரும் குழப்பம் நிலவுகிறது. கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் உள்ள தரப்பினர் வெவ்வேறு புதிய தரப்புகள் – கட்சிகளில் – அணிகளில் – இப்போது இணைந்து கொண்டுள்ளனர்.

இந்தப் பின்புலத்தில், நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், பழைய வேட்பு மனுக்களை வைத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் தேர்தல் நடத்த முற்படுவது தெற்கில் பலத்த குழப்பத்தை ஏற்படுத்தும்.

இதனால், பழைய வேட்பு மனுக்களின் அடிப்படையில் அந்தத் தேர்தல் நடத்தாமல், புதிதாக வேட்பு மனுக்களைக் கோரி பெற்று, அவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்தைச் செய்யும் முயற்சியை ஒரு தரப்பு ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இருந்த 2023ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தல் நடத்த முயன்றால், இப்போது புதிதாகப் பதிந்தவர்கள், கடந்த ஒன்றரை ஆண்டுகளில் புதிய வாக்காளர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள், இந்த உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்படும். அதனைக் காரணம் காட்டி நீதிமன்றத்தில் புதிதாக வழக்கு தொடர்ந்து, 2023 உள்ளூராட்சித் தேர்தலை, புதிதாக வேட்பு மனு பெற்று, அதன் அடிப்படையில் முன்னெடுக்குமாறு உத்தரவிடச் செய்யும் முயற்சி முன்னெடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## பரப்புரைப் பயணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலை 9 மணிக்கு ஆரம்பிக்கும் இந்தப் பயணம் தொடர்ந்து பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் ஊடாக இன்று நகரும் எனத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக்குமாகத் தொடர்ந்து நடைபெறஇருக்கும் இந்தப் பரப்புரைப் பயணத்தின் மேலதிக விபரங்கள் தொடர்ந்து அறியத்தரப்படும் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் தரப்பு தெரிவித்துள்ளது.

அதேவேளை, வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கும் மக்களின் அழைப்பின் பெயரிலான பரப்புரைப் பணிகளும் இடம்பெறத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

## உயர்நீதிமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பதாவது மக்கள் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மொரட்டுவை சொய்சாபுர விளையாட்டரங்கில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் உரையாற்றுகையில்,

"ஜனாதிபதி உள்ளிட்ட அரசு நமது சுயஇலாபத்திற்காக வங்கரோத்து அடைந்த நாட்டில் தேசிய வளங்களையும் சொத்துக்களையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றனர். சிரமப்படுகின்ற மக்களுக்கு வழங்க வேண்டியவைகளை புறக்கணித்து மக்களுக்கு விரோதமான முறையில் அரச நிர்வாகம் ஒன்றை தற்போது முன்னெடுக்கின்றனர். நான் என்கின்ற மமதையுடன் ஆட்சி யுகம் ஒன்றை ஏற்படுத்தி தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகபட்ச தந்திரங்களை பயன்படுத்தி, அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தைத் தான்தோன்றித்தனமாகப் பாவித்து அவர்களுடைய அரசியல் ஆயுட்காலத்தை நீடித்துக் கொள்வதற்காக முயற்சிகளை மேற்கொள்கின்ற இந்த இருண்ட யுகத்தை தோல்வி அடையச் செய்து, பொது மக்களுக்கான யுகத்தை நோக்கி செல்வதற்கு ஒன்றிணையுமாறு அழைப்பு விடுகின்றேன்.

இந்த அரசியலில் தலைகள் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. பணத்துக்காகவும், தரகுத் தொகைகளுக்காகவும், சலுகைகளுக்காகவும், வரப்பிரசாதங்களுக்காகவும், வைன் ஸ்டோஸ்களுக்காகவும் தமது சுய கௌரவத்தை இழக்கின்ற ஒரு அரசியல் கலாசாரம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் நாம் உள்ளிட்டவர்கள் எடுத்திருக்கின்ற தீர்மானம் குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். அதிலும் பல அழுத்தங்களும் கோரிக்கைகளும் வந்தாலும் திருடர்களோடு அல்லாமல் 220 இலட்சம் மக்களோடு ஒன்றாக இருப்பதற்கு நாமும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் தீர்மானித்தோம்.

நான் எடுத்த தீர்மானம் சரியானது என்று இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நிறுத்துவதற்கு அரசு மேற்கொண்ட முயற்சி மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயற்பாடு என உயர்நீதிமன்ற நீதியரசர் உட்பட ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் வழங்கிய தீர்ப்பு சுட்டிக் காட்டுகின்றது.

இந்தத் தன்னிச்சையான தான்தோன்றித்தனமான தீர்மானத்திற்கு ஜனாதிபதியே பொறுப்புக் கூற வேண்டும். நிதி அமைச்சராக அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறி இருப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இந்த உயரிய சட்டத்தை மீறுகின்ற நாடானது ஏல நிலமாக மாற்றுகின்ற ஆட்சியாளர்களோடு ஒன்றாக இருக்க முடியாது.



இன்னும் சில தினங்களில் பொது மக்களின் யுகத்தை ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கும். மக்களின் அடிப்படை உரிமையை மீறிய ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்கி இருக்கின்றார். மக்களின் வாக்குரிமையை மீறச் செய்திருக்கின்ற இவர்கள் எதிர்காலத்தில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும். நாட்டைச் சீரழித்த மக்களை ஏமாற்றியுள்ள மோசடிக்காரர்களின் ஆதரவோடு நியமிக்கப்பட்ட ஜனாதிபதியையும், இந்த ஆட்சியையும் நிராகரித்து மக்களின் துன்ப துயரங்களை உணருகின்ற ஆட்சி ஒன்றை கொண்டு வருவதற்கு ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுகின்றேன்.

220 இலட்சம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் தேசியக் கொள்கை ஒன்று முன்னெடுக்கப்படும். ஜனாதிபதி நடமாடும் சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படும். இந்த நாட்டில் பெரும்பான்மையானோர் வாழ்க்கை போராட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள். நான் ஜனாதிபதியானவுடன் ஜனநாயகத்துடன் கூடிய வளமான நாடொன்றைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பேன்." – என்றார்.





# மட்டக்களப்பில் இந்தியத் தூதுவருடன் தமிழரசுக் கட்சியினர் முக்கிய சந்திப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய பிரதிநிதிகளுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்குமான சந்திப்பு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அத்துடன் ஏனைய அரசியல் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபை முன்னாள் மேயர், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர், தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியினுடைய உப தலைவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்துகொண்டதோடு திருகோணமலை அங்கத்துவப் பிரதிநிதிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தர முடியவில்லை.

இந்தச் சந்திப்பின்போது சமகால அரசியல், ஜனாதிபதித் தேர்தல், தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சினைகள், அரசியல் சம்பந்தமான பிரச்சனைகள் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடைய கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அம்பாறை மாவட்டம் சார்பாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனால் கல்முனையில் கலாசார மண்டபமொன்றை ஸ்தாபிப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மேலும், இவர் கிழக்கு மாகாணத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தையும் அமைக்குமாறு கோரிக்கை விடுத்தார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# பிடிச்சுராவிப் போக்கு!

நாய் வாலை நிமிர்த்த முடியாது. அது போல, தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதிடும் ரணிலின் போக்கும் மாறக்கூடியது அல்ல.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமல் முடக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு ஜனநாயக விரோதி என்பதை இப்பத்தியில் பல தடவைகள் நேரடியாவே சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

அந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் விதத்தில் காட்டமான தீர்ப்பு ஒன்றை அவ்விவகாரத்தை ஒட்டி உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியிருக்கின்றது.

அந்தத் தீர்ப்புக்குப் பதில் கொடுக்கும் விதத்தில் நேற்று உடனடியாகவே பகிரங்க நிகழ்வு ஒன்றில் கருத்து வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதனை நோக்கும் போது நாய் வாலை நிமிர்த்தும் முயற்சியும் ரணிலின் பிடிச்சுராவிப் போக்கு மாறும் என்று நம்புவதும் ஒன்றுதான் என எண்ணத் தோன்றுகின்றது.

நிதியமைச்சர் என்ற முறையில் உள்ளூராட்சி தேர்தலுக்கான நிதியை வெட்டி, தேர்தலை நடத்த விடாமல் பண்ணியமை மூலம் மக்களின் - வாக்காளர்களின் - அடிப்படை உரிமையை ஜனாதிபதி மீறி விட்டார் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

இப்படி சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறித்தமை அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறிய நடவடிக்கை என்று உயர் நீதிமன்றம் பெயர் குறிப்பிட்டுத் தீர்ப்பளித்து இருக்கின்றது.

ஆனால் அந்தத் தீர்ப்புக்கு எதிராகப் பகிரங்க வெளியில் நேற்று உடனடியாகவே கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்தத் தேர்தலை நடத்த முடியாமல் போனமைக்காகத் தாம் வருந்தவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

உயர் நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதிலும் குழப்பம் - குசும்பு - பண்ண அவர் விழைகின்றார் என்பது அவரது பேச்சினூடாக வெளிப்பட்டு நிற்பதும் அவதானிக்கத்தக்கது.

நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாகவே விரைந்து, மற்றைய தேர்தல்களுக்கு குழப்பம் ஏற்படுத்தாமல், நடத்தி முடிக்கும்படி தேர்தல் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ வேறு விதமாகக் கருத்து வெளியிடுகின்றார்.

“தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தேர்தல் ஆணையம்தான் முடிவு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் இன்று தெரிவித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு நாம் அனைவரும் தீர்மானித்துள்ளோம். அதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தலையும், உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் நடத்த எதிர்பார்த்துள்ளோம்” - என்ற சாரப்பட ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இதன் அர்த்தம் என்ன? ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும், பொதுத் தேர்தல். அதன்பின்னர் மாகாண சபை தேர்தலையும் உள்ளூராட்சி தேர்தலையும் நடத்தலாம் என்று தம்மிஷ்டத்தைத் தான் அவர் இன்னும் பிரதிபலிக்கின்றார். பிடிவாதம் பிடிக்கின்றார்.

இப்போது தமக்கு இருக்கும் ஜனாதிபதி பதவி நிலை என்ற காப்பை நம்பி அதிகம் அதிகப்பிரசங்கித்தனமாக பிரபலாபிக்கின்றார் அவர். உயர் நீதிமன்ற தீர்ப்புடன் விளையாடுகின்றார். பதவி நிலையை விட்டு இறங்கும் போது அவரது நிலைமை பரிதாபகரமானதாக இருக்கும் என்பதை அவரது இப்போதைய நடத்தை உறுதிப்படுத்தி இருக்கின்றது.




# தமிழகத்தில் தி.மு.கவை பா.ஜ.க. நிச்சயம் ஒழிக்கும்

## அண்ணாமலை பரபரப்பு பேச்சு

"தமிழகத்தில் தி.மு.க. எப்போது ஒழிகிறதோ, அப்போது தான் மக்கள் உண்மையான ஜனநாயகம், மறுமலர்ச்சியைப் பார்ப்பார்கள். அதை பா.ஜ.க. நிச்சயம் செய்யும்."

– இவ்வாறு மதுரையில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மதுரை தெற்கு தொகுதியில் பா.ஜ.க. முப்பெரும் விழா நேற்று இரவு நடைபெற்றது. மாநகர் மாவட்ட தலைவர் மகா சுசீந்திரன் தலைமை வகித்தார். இதில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை உரையாற்றுகையில்,

"தமிழகத்தில் திராவிட கட்சிகளை ஒழிக்க நாடாளுமன்ற தேர்தலில் பிள்ளையார் சுழி போட்டுள்ளோம். தமிழகம் திராவிடத்தின் பிடியிலிருந்து வெளியே வந்துவிட்டதை நாடாளுமன்ற தேர்தல் முடிவு தெளிவுபடுத்தியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலில் 39 தொகுதிகளில் மொத்தமுள்ள 68,045 பூத்துகளில் 7,174 பூத்துகளில் பா.ஜ.க. முதலிடமும், 18,086 பூத்துகளில் 2 ஆம் இடம் பிடித்துள்ளோம். மொத்த பூத்துகளில் 37 சதவீத பூத்துகளில் முதலிடம், 2 ஆம் இடம் பிடித்துள்ளோம். இந்த 37 சதவீதம் 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் நூறு சதவீதமாக மாறும். திராவிட கட்சிகளை எதிர்த்து அரசியல் செய்கிறோம். ஒவ்வொரு முறை ஆட்சிக்கு வரும் போதும் 15 ஆயிரம் ரூபா முதல் 20 ஆயிரம் கோடி ரூபா வரை கொள்ளையடிக்கிறார்கள்.

திராவிட கட்சிகளிடம் உள்ள பணம் வங்கக்கடலில் உள்ள தண்ணீரை விட அதிகம். இதை எதிர்த்து 2024 இல் மார்தட்டி நின்றோம் வெற்றி பெற்றோம். மதுரையில் 2 ஆம் இடம் பிடித்ததை மிகப்பெரிய வெற்றியாக கருதுகிறோம். இந்த வெற்றி 2026 தேர்தலில் பா.ஜ.க. முதலிடம் பிடிப்பதற்கான முன்கூட்டிய அறிவிப்பாக பார்க்கிறோம். மதுரை மக்கள் மாற்றி யோசித்துள்ளனர். தமிழக மக்களும் விரைவில் மாற்றி யோசிப்பார்கள். பா.ஜ.கவின் உச்சபட்ச வளர்ச்சி என்பது தமிழகத்தில் ஆட்சியை பிடிப்பது தான். தமிழகத்தில் வெற்றியை முத்தமிடும் அளவுக்கு வளர்ந்துள்ளோம்.

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணிக்கு 80 லட்சம் பேரும், பா.ஜ.கவுக்கு மட்டும் 50 லட்சம் பேரும் வாக்களித்துள்ளனர். தமிழகத்தில் மிகப்பெரிய ஆளுமைகளான எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோர் ஆட்சி செய்துள்ளனர். அவர்களுக்கு பின்னால் ஆட்சிக்கு வந்தவர்களை நினைத்து பார்த்துள்ளனர். அந்த கட்சிக்கே ஒரு கோடி பேர் தான் வாக்களித்துள்ளனர். பா.ஜ.க. கூட்டணியை விட 20 லட்சம் வாக்குகள் தான் அதிகம் பெற்றுள்ளனர்.

அரசு இயந்திரங்களை உன்னிப்பாக கவனிக்கும் அரசு அதிகாரிகள் தி.மு.கவுக்கு அடுத்து அதிகமாக பா.ஜ.வுக்கு வாக்களித்துள்ளனர். படித்தவர்கள், இளைஞர்கள் பா.ஜ.க. பக்கம் திரும்பியதால் தி.மு.கவுக்கும், அதன் கூட்டணி கட்சிகளின் வாக்குகள் குறைந்துள்ளது. நோட்டா கட்சி என கிண்டல் செய்தனர். அதை முறியடித்து கூட்டணியுடன் 18 சதவீதம், தனித்து 13 சாவீதம் வாக்குகள் வாங்கியுள்ளோம்.

மோடிக்கு பின்னால் நாங்கள் திரண்டிருப்பது தி.மு.கவை ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே, அந்த ஒற்றை காரணத்துக்காகவே எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு தமிழகத்தில் இருக்கிறோம். தி.மு.க. எனும் தீயசக்திக்கு தமிழகத்தில் இடமில்லை. தி.மு.க. என்று ஒழிக்கப்படுமோ அன்று தான் தமிழகத்தில் உண்மையான ஜனநாயகம், மறுமலர்ச்சியை மக்கள் பார்ப்பார்கள். அதை ப.ஜ.க. நிச்சயமாக செய்யும்.

தமிழகத்தில் 2 பெரிய திராவிட கட்சிகளும் தங்களுக்கு எதிராக 3 ஆவது அணி உருவாக விடமாட்டார்கள். அந்த நோக்கத்தில் தான் மூப்பனார், வைகோ, விஜயகாந்த் ஆகியோரை ஒழித்துக்கட்டினர். அதே நோக்கத்தில் தான் இப்போது பா.ஜ.க. மீது தாக்குதல் நடத்துகிறார்கள். இது மிகப்பெரிய சவால். பா.ஜ.க. செடி வளர ஆரம்பித்துள்ளது. பா.ஜ.க. வளர்ந்து விட்டால் மக்கள் உண்மையான ஜனநாயகத்தை பார்ப்பார்கள்.

பாஜக தொண்டரின் அடிப்படை ரத்தம் திராவிட கட்சிகள் வேண்டாம் என்பதே. வெவ்வேறு காலகட்டத்தில் திராவிட கட்சிகளின் பிடியில் மாட்டியுள்ளோம். இப்போது மக்கள் நமக்கு வாக்களிக்க தயாராக இருக்கும் போது ஏன் திராவிட கட்சிகளின் பின்னால் செல்ல வேண்டும். இந்தியாவை சுற்றியுள்ள இலங்கை, பங்களாதேஷ் , நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் ஜனநாயகம் தோற்றுள்ளது. இந்தியாவில் மட்டும் ஜனநாயகம் மரியாதையுடன் உள்ளது. இதனால் மோடியின் கரத்தை வலுப்படுத்த வேண்டும். தமிழகத்தில் தேசியம் வளர வேண்டும். பா.ஜ.க. ஆட்சிக்கு வர வேண்டும்."– என்றார்.



# நூற்றுக்கணக்கான கொடிகளை தமிழ் நாடு பார்த்துள்ளது

## விஜய் குறித்து வானதி சீனிவாசன் கருத்து

தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அறிமுகம் செய்துள்ள நடிகர் விஜய்க்கு, பா.ஜ.க. தேசிய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு கோவை மாவட்டம் சூலூரில் உள்ள தனியார் கலை அறிவியல் கல்லூரியில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான கைத்தறி ஆடை அணிவகுப்பு போட்டி நேற்று நடந்தது. கைத்தறி ஆடைகளை அணிந்தபடி மாணவ, மாணவிகள் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

பா.ஜ.க. தேசிய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் மற்றும் நடிகை நமீதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். முன்னதாக இருவரும் மாணவ, மாணவிகளுடன் இணைந்து ஆடை அணிவகுப்பில் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் வானதி சீனிவாசன் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை நடிகர் விஜய் அறிமுகப்படுத்தியதற்கு வாழ்த்துக்கள். தமிழகம் இதுபோன்ற நூற்றுக்கணக்கான கொடிகளையும், தலைவர்களையும் பார்த்துள்ளது.

கோவையில் கட்டப்பட்டுள்ள மேம்பாலங்கள், அத்திக்கடவு - அவிநாசி திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் கடந்த ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட போதும் தற்போது பணிகள் முடிக்கப்பட்டு திமுக அரசால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பின் கோவைக்கு செம்மொழிப் பூங்கா உள்ளிட்ட பல திட்டங்களை அறிவித்துள்ளனர்," - என்றார்.

# கொல்கத்தா பெண் மருத்துவர் கொல்லப்பட்ட மருத்துவமனையில் சி.ஐ.எஸ்.எப். ஆய்வு



கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள மத்தியப்படை பணிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த மருத்துவமனையில் சி.ஐ.எஸ்.எப். உயரதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் 31 வயது பெண் மருத்துவர் கடந்த 9 ஆம் திகதி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் இந்தியாவை உலுக்கியது.

இது தொடர்பான வழக்கை உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன் செவ்வாய் கிழமை விசாரணைக்கு வந்தது.

கடந்த 15 ஆம் திகதி அதிகாலையில் ஒரு கும்பல் ஆர்.ஜி.கர் மருத்துவமனைக்குள் புகுந்து 2 தளங்களில் மருத்துவ சாதனங்கள் மற்றும் பிற பொருள்களை சேதப்படுத்திய நிலையில் அதுகுறித்து நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இது போன்ற சம்பவங்களை எதிர்கொள்ள கொல்கத்தா பொலிஸார் யார் நிலையில் இல்லாதது குறித்து கவலை தெரிவித்தனர். ஓகஸ்ட் 15 ஆம் திகதி வன்முறைக்கு பிறகு பெரும்பாலான மருத்துவர்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறிவிட்டதை கவனத்தில் கொண்ட நீதிபதிகள் அவர்கள் பணிக்கு திரும்ப பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவது அவசியம் என்றனர்.

அப்போது மருத்துவமனை வளாகத்திற்கு மத்தியப் படைகள் பாதுகாப்பு அளிக்கும் என்று சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உறுதி அளித்தார். இதில் தங்களுக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்று மேற்கு வங்க அரசு சார்பில் ஆஜரான கபில் சிபல் கூறினார்.

இந்நிலையில் நாடாளுமன்றம், விமான நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களை பாதுகாக்கும் மத்திய தொழிலக பாதுகாப்பு படையின் அதிகாரிகள் நேற்று முன்தினம் கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர் மருத்துவமனைக்கு வந்தனர். பாதுகாப்பை ஏற்றுக்கொள்வது தொடர்பாக மருத்துவமனை வளாகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து சி.ஐ.எஸ்.எப். மூத்த அதிகாரி கே.பிரதாப் சிங் கூறுகையில், "உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில் இங்கு வந்துள்ளோம். எங்கள் பணியை முடித்த பிறகு மூத்த அதிகாரிகள் உங்களுக்கு விளக்கம் அளிப்பார்கள்" - என்றார்.





# ஈரான் ஜனாதிபதி ரைசியின் மரணம்: விசாரணை முடிவுகள் வெளியாகின

கடந்த மே மாதம் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கொல்லப்பட்ட ஹெலிக்கொப்டர் விபத்து என்று இறுதி விசாரணை முடிவுகள் வெளியாகி உள்ளன அந்நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மோசமான வானிலை மற்றும் விமானியால் ஹெலிக்கொப்டரின் எடையைக் கையாள இயலாமையினால் ஏற்பட்டது என்று இறுதி விசாரணை முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

மேற்படி ஹெலிக்கொப்டர் நிர்ணயிக்கப்பட்ட வரம்பைவிட அதிக எடையை சுமந்து சென்றதாக கண்டறிந்தது. இந்த முடிவுகள் கடந்த மே மாதம் ஈரானிய இராணுவத்தின் ஆரம்ப விசாரணையை உறுதிப்படுத்துகிறது.

இப்ராஹிம் ரைசியின் ஹெலிக்கொப்டர் விபத்து தொடர்பான வழக்கு விசாரணை நிறைவடைந்துள்ளது.

நடந்தது விபத்து தான் என்பதில் முழு உறுதி உள்ளது என்று அதிகாரப்பூர்வ ஆதாரங்களை மேற்கொள்காட்டி ஃபார்ஸ் செய்தி கூறியது.

ஈரானிய இராணுவ விசாரணை முன்னதாக கடந்த மே மாதம், ஈரானிய இராணுவம், அதன் ஆரம்ப விசாரணையில், ஹெலிக்கொப்டர் இடிபாடுகளில் “புல்லட் ஓட்டைகள்” இருந்ததற்கான தடயங்கள் எதுவும் இல்லை என்று கண்டறிந்தது.

ஈரானிய செய்தி நிறுவனமான ஃபார்ஸ் அதிகாரப்பூர்வ ஆதாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

# பிரதமர் மோடியின் உக்ரைன் பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருக்கும்

## போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க் நம்பிக்கை







பிரதமர் நரேந்திர மோடியின் உக்ரைன் பயணம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.

போலந்து சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, தலைநகர் வார்சாவில் அந்நாட்டு பிரதமர் டொனால்ட் டஸ்க்-கை சந்தித்துப் பேசினார். பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய பிரதமர் மோடி,

“இந்தியா – போலந்து இடையே பாதுகாப்புத் துறையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கமான ஒத்துழைப்பு நமது ஆழ்ந்த பரஸ்பர நம்பிக்கையின் அடையாளம். இந்தப் பகுதியில் பரஸ்பர ஒத்துழைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும். புதுமை மற்றும் திறமை ஆகியவை நம் இரு நாடுகளின் இளைஞர் சக்தியின் அடையாளம். திறன்மிகு தொழிலாளர்களின் நலனுக்காக இரு தரப்பினருக்கும் இடையே ஒரு சமூக பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவும் போலந்தும் சர்வதேச விவகாரங்களில் இணைந்து செயல்படுவதில் முன்னேற்றம் கண்டு வருகிறது. சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். சர்வதேச நிறுவனங்கள் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறனைக் கொண்டிருப்பது காலத்தின் தேவையாக இருக்கிறது. எனவே, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் விரைவான சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.” – என்றார்.

இதன்போது அப்போது பேசிய போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க்,

“இந்தியா – போலந்து இடையேயான உறவை வலுவான கூட்டாண்மை நிலைக்கு கொண்டு செல்ல இன்று முடிவு செய்துள்ளோம். இது வெறும் வரையறை மட்டுமல்ல, வெறும் வார்த்தையல்ல. பல்வேறு துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான எங்கள்தீர்மானம் இதற்குப் பின்னால் உள்ளது.

மிகவும் உணர்ச்சிகரமான பிரச்சினைகளில் ஒரு தெளிவுபடுத்தலுடன் தொடங்கினோம். அமைதியான முறையில், சரியான முறையில், உடனடியாக போரை முடிவுக்கு கொண்டு வர தயாராக இருப்பதாக பிரதமர் மோடி உறுதியளித்தார். இந்தியா இன்றியமையாத மற்றும் மிகவும் ஆக்கபூர்வமான பாத்திரத்தை வகிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். எனவே, இந்த அறிவிப்பு எங்களுக்கு மிகவும் முக்கியமானது. இன்னும் சில மணி நேரங்களில் பிரதமர் மோடி உக்ரைனுக்குச் செல்ல உள்ளார். உங்களின் உக்ரைன் பயணம் வரலாற்று சிறப்புமிக்கதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.” – என்றார்.

# சங்கு முழக்கத்தோடு எமது பயணத்தைத் தொடர்வோம்

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு முழு ஆதரவைப் பகிரங்கமாக அறிவித்த சிறீதரன்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்குப் பூரண ஆதரவை வழங்குகின்றேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்கமாக அறிவித்த்தார்.

சங்கு முழக்கத்தோடு எமது பயணத்தைத் தொடர வேண்டும் என எல்லோரையும் அன்போடு அழைக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்புக்குப் பின்னர் இருவரும் கூட்டாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர். இதன்போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ன முடிவை எப்போது எடுத்தாலும் தனிப்பட்ட முறையில் எனது ஆதரவு தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு அளிக்கப்படும். கட்சி என்ன முடிவை எடுக்கின்றதோ, எடுக்கவில்லையோ அது எவ்வளவு தூரம் எம்மைத் தள்ளப்போகின்றதோ என்பதைத் தமிழ் மக்கள் தீர்மானிப்பார்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக எனது ஆதரவு அரியநேத்திரனுக்கு அளிக்கப்படும். தமிழ் மக்கள் காத்திரமான ஒரு செய்தியை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வழங்க வேண்டும்.” – என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன், தான் களமிறங்கும் சங்கு சின்னத்தை சிபாரிசு செய்தவர் சிறீதரன் எம்.பி. என்று தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தமக்கான குறியீடாக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.








# வழமையான போக்குவரத்திற்குப் பாதிப்பின்றி தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்காக பஸ்கள்

## இலங்கை போக்குவரத்து சபை தகவல்

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்காக பஸ்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், வழமையான போக்குவரத்திற்கு இதுவரை எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

பஸ்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் பொதுமக்களிடமிருந்து எவ்வித முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டுள்ளார்.

கிராமப்புறங்களில் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் தேர்தல் கூட்டங்களுக்கு வழங்கப்பட மாட்டாது எனவும் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்கள் நிறைவடையும் வரை பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் பஸ்கள் வழங்கப்படும் எனவும் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான பஸ்களுக்கான செலவுகள் தொடர்பான அறிக்கையை இலங்கை போக்குவரத்து சபை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வழங்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அண்மையில் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு அமையவே இலங்கை போக்குவரத்து சபையினால் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.




# 35 நாடுகளின் பயணிகளுக்கான சுற்றுலா விசா கட்டணம் நீக்கம்

35 நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கான சுற்றுலா விசாக் கட்டணத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, ஆஸ்திரேலியோ, சவூதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இவற்றுள் அடங்குகின்றன.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைத் திட்டம் எதிர்வரும் நாள்களில் நாடாளுன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், விசா கட்டணம் இரத்து செய்யப்படுவதற்கான தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு முன்னர் 7 நாடுகளுக்கான சுற்றுலா விசா கட்டணம் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய முதலீட்டு திட்டத்தின் கீழ் ஏழு புதிய முதலீட்டு வலயங்கள்

## திலும் அமுனுகம தெரிவிப்பு



தற்போதைய அரசாங்கத்தின் புதிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 7 புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாங்குளம், பரந்தன், காங்கேசன் துறை, திருகோணமலை, இரணவில, அம்பாந்தோட்டை மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை அண்மித்து முதலீட்டு வலயங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த ஆண்டிற்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்டன எனவும் ஆனால் கடந்த 6 மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி ஏற்கனவே 800 மில்லியன் அமெரிக்க டொலர்வருமானம்கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான 27 திட்டங்கள் தற்போதும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் துறைமுக நகரத்தில் 118 காணிப் பிரிவுகளில் 46 பிரிவுகள் சீன முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், துறைமுக நகர வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க தற்போது 21 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்.



# அரச ஊழியர் சம்பளம் ஜனவரியில் அதிகரிப்பு

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச பணியாளர்களதும் அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொதுச் சேவைத் துறையினரின் சம்பளப் பிரச்சினைகள் தொடர்பான நிபுணர்கள் குழுவின் தலைவர் உதய செனவிரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் கடைநிலை அரச பணியாளர்களின் அடிப்படை வேதனம் 24 சதவீதத்தினாலும், உயர்நிலையில் உள்ள அரச பணியாளர்களின் சம்பளம் அவர்களின் தகுதிகளுக்கு அமைய 24 முதல் 50 சதவீதம் வரையிலும் அதிகரிக்கப்படவுள்ளது.

அதேநேரம், நிலவும் பணவீக்கத் தன்மை மற்றும் பொருளாதார நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, 2025 ஜனவரி முதல் அரச பணியாளர்களின் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 25,000 ரூபாவாக அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக உதய செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.




# குரங்குக் காய்ச்சல் நோய் தொடர்பாக சுகாதார நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை

விமான நிலையத்தினூடாக இலங்கைக்குள் பிரவேசிக்கும் பயணிகளில் அிழஒ எனப்படும் குரங்கு காய்ச்சல் தொற் றுக்குள்ளானவர்களை அடையாளம் காணும் வகையில் தொற்றுத் தடுப்பு செயல்முறை பலப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால், அந்நோயாளர்களுக்காகக் கொழும்பு தொற்று நோய் நிறுவகத்தில் தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சைவசதிகள்ஏற்படுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் குரங்குக் காய்ச்சல் நோயாளிகளைக் கண்டறிவதற்கான ஆய்வக வசதிகளைக் கொண்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற நிபுணர் குழுக் கூட்டத்தில் இந்த நோய்க்கான சிகிச்சையளிப்பு தொடர்பாகத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டமையோடு, அது தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையும் அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

உலகளாவிய தயார்நிலைக்காகக் கடந்த 14 ஆம் திகதி, இந்த நோய்ப் பரவலை உலக சுகாதார நிறுவனம் பொதுச் சுகாதார அவசரநிலையை அறிவித்தது.

காய்ச்சல், தோலில் தோன்றும் கொப்புளங்கள் மற்றும் வீங்கிய நிணநீர் கணுக்கள் ஆகியவை குரங்கு காய்ச்சலின் முக்கிய அறிகுறிகளாகும்.

# மீண்டும் பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என்கிறார் சஜித்

குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமைகள் மீறப்படுகின்றன என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பெண்கள் வீடுகளிலும், வீதிகளிலும் மற்றும் வேலைத்தளங்களிலும் அழுத்தங்களுக்கும் வன்முறைகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

கடன், தொழில்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, நாட்டின் பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத்துறை என ஒவ்வொரு துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

வெறும் வார்த்தைகளால் அன்றி, தொழில்துறை திட்டங்களோடு அரச நிர்வாகம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவற்றைப் பாதுகாத்து பாதாளத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவத்தை வழங்கும்.” – என்றார்.





# விவசாயப் பயிர்ச் செய்கைக்கு இனி 15 ஆயிரம் ரூபா மானியம்

எதிர்வரும் பெரும்போகத்திற்காக நெற்செய்கை உள்ளிட்ட ஏனைய விவசாய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஒரு ஹெக்டேயருக்கு 15 ஆயிரம் ரூபா மானியம் வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஹெக்டயார் விவசாய நிலத்திற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இந்த மானியத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.



# நோர்வேயின் விவசாயத் தொழில்நுட்பம் இலங்கைக்கு வழங்குவதற்கு இணக்கம்

நோர்வேயில் தற்போது பயன்படுத்தப்படும் விவசாயத் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தை இலங்கை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் நோர்வேயின் இலங்கைக்கான முன்னாள் விசேட பிரதிநிதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விவசாயத் துறையின் அபிவிருத்திக்காக இலங்கை விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# முதன்மை பணவீக்கம் ஜூலையில் அதிகரிப்பு


தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பண வீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தில் 2.4 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் ஜூலை மாதத்தில் 2.5 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், கடந்த ஜூன் மாதத்தில் 1.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவு பணவீக்கம் ஜூலை மாதத்தில் 2.9 சதவீதமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

ஜூன் மாதத்தில் 2.7 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லா பணவீக்கமானது, ஜூலை மாதத்தில் 2.2 சதவீதமாக சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# செப்டெம்பர் 3 ஆம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோக நடவடிக்கைகள் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பிரதி அஞ்சல் மா அதிபர் இந்தத் தகவலை வழங்கியுள்ளார்.

இந்தப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்கான விசேட தினமாக செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனப் பிரகடனப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கெஹலிய உட்பட நான்கு பேருக்கு விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட நால்வரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுளின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியே தீருவோம் என்கின்றார் வஜிர

“அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு தேர்தல் வாக்குறுதி அல்ல. மாறாக அடுத்த வருடத்துக்கான வரவு – செலவு திட்டத்தில் உள்வாங்குவதற்கு அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்ட தொன்றாகும். ரணில் விக்கிரமசிங்க சொல்வதைச் செய்யும் தலைவர். அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கியே தீருவோம்.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாடு வீழ்ச்சியடைந்த நிலையில் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துச் சென்றது. என்றாலும் தற்போது படிப்படியாக நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைந்து வருகிறது. அதன் பிரகாரம் மக்களின் வருமானமும் அதிகரிக்க வேண்டும். அதனால் மக்களின் வருமானத்தை அதிகரிக்க தேவையான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார். தொழில் முயற்சியாளர்களை அதிகரித்து அவர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வாழ்க்கைச்செலவு அதிகரிக்கும்போது, அதற்கு ஏற்ற வகையில் நாளாந்த சம்பளத்துக்குத் தொழில் செய்பவர்கள் தங்களின் நாள் சம்பளத்தை அதிகரித்துக்கொள்கின்றனர். ஆனால் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு மேற்கொள்வதாக இருந்தால், அதற்கு திறைசேரியின் அனுமதி பெற்று முறையாக மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கிறது. அதனால் இந்த நடவடிக்கையை முறையாக மேற்கொண்டு தற்போது அரச ஊழியர்களுக்கு 25ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான அமைச்சரவையும் அனுமதி வழங்கி இருக்கிறது.

அடுத்த வருட வரவு – செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டு. ஜனவரி முதல் அதனை வழங்க நடவடிக்கை எடுப்போம். இது தேர்தலை இலக்கு வைத்துத் தெரிவிக்கப்படும் வாக்குறுதி என யாரும் நினைக்க வேண்டாம். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயமாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வதையும் செய்யும் தலைவர் என்பது அரச ஊழியர்களுக்கு தெரியும். ஏனெனில் அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கியது ரணில் விக்கிரமசிங்க என்பது அவர்களுக்கு தெரியும்.

மேலும் இந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் முக்கியமான தேர்தலாகும். நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் யாரை வேண்டுமானாலும் நிராகரிக்கலாம். ஆனால் இந்த தேர்தலில் போட்டியிடும் 39 வேட்பாளர்களில் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே நாட்டை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்களுடன் களமிறங்கியுள்ளார். அதனால் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் இந்த நாடு தோல்வியடையும். நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால் மீண்டும் கட்டியெழுப்ப முடியாத நிலைக்குத் தள்ளப்படும் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.”– என்றார்.

# வவுனியாவில் பிரசவத்தின் போது மரணித்த சிசுவின் உடற்கூற்றுப் பரிசோதனை தாமதம்

**(கே.வசந்தன்)**

வவுனியா வைத்தியசாலையில் பிறந்து மரணித்த சிசுவின் உடலை உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ள வதிக் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சிசுவின் தந்தை இன்று கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி வவுனியா, செட்டிகுளம், பிரமணாலங்குளம் பகுதியைச் சேர்ந்த 30 வயது யுவதி ஒருவர் பிரசவத்திற்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த 20 ஆம் திகதி அதிகாலை சத்திரசிகிச்சை மேற்கொண்டு சிசுவை எடுத்துள்ளனர்.

எனினும் சிசு உயிரிழந்துள்ளது. வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர்களின் அசமந்த போக்கே தமது சிசு மரணமடையக் காரணம் என தந்தை வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து நேற்று முந்தினம் மாலை வவுனியா மாவட்ட நீதிபதி சிசுவின் உடலை பார்வையிட்டமையுடன், தந்தையின் வாக்குமூலத்தையும் பெற்றிருந்தார்.

நேற்று யாழ் வைத்தியசாலையில் கடமையாற்றும் விசேட சட்ட வைத்திய அதிகாரியிடம் சடலத்தை ஒப்படைத்து விசாரணைகளை முன்னெடுக்க வவுனியா நீதிமன்று உத்தரவிட்டது.

எனினும், சிசுவின் உடலைக் கொண்டு செல்ல வவுனியா வைத்தியசாலையினர் அம்புலன்ஸையோ அல்லது வேறு வாகனத்தையோ கொடுக்க மறுத்துள்ளமையால் சிசுவின் உடல் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படவில்லை. பெற்றோர் அதனைத் தாம் கொண்டு செல்ல முடியாது எனவும் வைத்தியசாலையின் தவறுக்கு அவர்களே கொண்டு செல்ல வேண்டும் எனத் தெரிவித்து சிசுவின் சடலத்தை பொறுப்பேற்கவில்லை.

இதனால் பிறந்து ஒரு நாள் கூட மண்ணில் வாழாத சிசு மரணித்த பின் இரண்டாவது நாளாகவும் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ளது. இது குறித்து பெற்றோர் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளர் அல்லராம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளரல்லர். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரலவின் கூற்றின் ஊடாக விளங்கிக் கொள்ள முடிகிறது. நிமல் சிறிபாலடி சில்வா, பிரசன்ன ரணதுங்க ஆகியோரை ஊழல்வாதிகள் என்று விமர்சித்த தலதா அதுகோரல அந்த அணியின் பக்கம் செல்லவுள்ளமை அருவருப்பானது."

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடத்தினோம். இந்த கூட்டத்தில் அநுராதபுர மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் எவரும் கலந்துக் கொள்ளவில்லை. இருப்பினும் அநுராதபுர மாவட்ட மக்கள் பெருமளவில் கலந்துக் கொண்டார்கள்.

தேசியத்தை காட்டிக் கொடுத்து சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபடுபவர்களை மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ள வேண்டாம் என்று அநுராதபுர மாவட்ட மக்கள் அழுத்தமாக வலியுறுத்தினார்கள். எவர் எங்களை விட்டுச் சென்றாலும் மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடவில்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுகிறார் என்பதை ஆரம்பத்தில் இருந்து திட்டவட்டமாக குறிப்பிட்டோம். நாங்கள் குறிப்பிட்டதை இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல உறுதிப்படுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல புதன்கிழமை நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றி, ஐக்கிய





தேசியக் கட்சியின் தலைவரும், கட்சியின் பிரதித் தலைவரும் இருமுனைகளில் தேர்தலில் போட்டியிடுவதால் தனக்கு அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. ஆகவே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவதாக இருந்தால் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைவர் பதவியை வகித்துக் கொண்டு சுயேச்சையாக போட்டியிடுவதாக குறிப்பிட்டுக் கொள்கிறார். எமது தரப்பினரும் அதை நம்பி அவருக்கு ஆதரவு வழங்க சென்றுள்ளார்கள்.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை மோசடியாளர்கள், ஊழல்வாதிகள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இன்று அவர்களை இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோரல அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பிரசன்ன ரணதுங்க ஆகியோரை கடுமையாக விமர்சித்தார். ஆனால் இன்று அவர்கள் இருக்கும் அணியின் பக்கம் அருவருப்பு இல்லாமல் செல்லவுள்ளார். இவ்வாறானவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்."– என்றார்.



# தபால் மூலம் வாக்களிப்பதற்கு 712,319 பேர் தகுதி பெற்றனர்

2024 ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 712,319 பேர் தகுதி பெற்றுள்ளனர், அவர்களில் அதிக எண் ணிக்கையி லானவர்கள் குருநாகல் மாவட்டத்தில் தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குருநாகல் மாவட்டத்தில் 76,977 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# ஜனாதிபதி தேர்தலில் நிலைப்பாடு: சமத்துவக் கட்சி ஆராய்கின்றது!

வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் சமத்துவக்கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கட்சி உறுப்பினர்களிடையே கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பிரதான வேட்பாளர்களான ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கும் சமத்துவக் கட்சிக்கும் இடையே சந்திப்புக்கள் கடந்த மாதம் இடம்பெற்றன. இதனையடுத்து கட்சி தனது நிலைப்பாட்டை எடுக்கும் முகமாக கட்சி உறுப்பினர்களிடையே கருத்தறியும் சந்திப்புக்களை மேற் கொண்டுள்ளது.

அந்த வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் சமத்துவக் கட்சியின் உறுப்பினர்களை கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் மற்றும் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன், மாவட்ட அமைப்பாளர் வேங்கை ஆகி யோர் சந்தித்து வருகின்றனர்.










# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2024




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம். சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம்




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 23.08.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய் தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த் தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக் காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.





